

திருச்சி மாநகரம் மேற்கு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட உயகொண்டான் திருமலை கொடாப்பு 25 வார்டு பகுதியை சேர்ந்த தொழில் முனைவோர்களுக்கு உதவியாக 13 பெண்களுக்கு இலவச தையல் மெஷின்களை நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு வழங்கினார். இந்த நிகழ்வில் மாநகர மேயர் அன்பழகன், மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி,ஏ.ஐ.டி.யூ.சி. மாவட்ட துணை செயலாளர் சுமதி , ம ண்டி சேகர்உள்ளிட்ட பலர் உடண் இருந்தனர்.



கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம் எடப்பாடி பழனிக்கவுண்டர் திருமண மண்டபத்தில் சேலம் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. தலைமையில், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.மணிகண்டன் வரவேற்புரையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### ஊரக வளர்ச்சித்துறை கட்டுப்பாட்டிலுள்ள நீர் நிலைகளில்

# சேலம் மாவட்டத்தில் மட்டும் 4 லட்சம் மீன் குஞ்சுகள் இருப்பு!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேட்டி!



சேலம், ஜுலை 2 -

சேலம் மாவட்டத்திற்கு 200 எக்டேர் பரப்பளவில் ஊரக வளர்ச்சித்துறை கட்டுப்பாட்டிலுள்ள நீர்நிலைகளில் 4 இலட்சம் மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்படுகிறது என்று சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மீன் வளத் துறையின் சார்பில் முத்துநாக்கன்பட்டி ஊராட்சி, நைனாத்தாள் ஏரியில் 20,000 மீன் விரலி களை இருப்பு வைக்கும் பணியினை தொடங்கி வைத்து பேசுகையில் குறிப் பிட்டார்.

சுற்றுலாத்துறை அமைச் சர் இரா.இராஜேந்திரன் மீன்வளத் துறையின் சார் பில் நாட்டின மீன் குஞ்சு களை ஆறுகளில் இருப்பு செய்தல் திட்டத்தின் கீழ் 20,000 மீன் விரலிகளை இருப்பு வைக்கும் பணி யினை முத்துநாயக்கன் பட்டி ஊராட்சி, நைனாத் தாள் ஏரி பகுதியில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். இரா.பிருந்தா தேவி, முன்னிலையில் தொடங்கி வைத்தார். இந் நிகழ்ச்சிக்குப்பின்னர் செய்தியாளர்களிடம் சுற் றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது :

முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலனுக் காக பல்வேறு திட்டங்க ளை அறிவித்து செயல்ப டுத்தி வருகிறார்கள். விவ சாயத்தை போலவே மீன் வளத்தையும் பெருக்கவே அரசு ஆராய்ச்சி செய்து உள்நாட்டு மீனவர்கள் பயன்பெறவும், அதன் மூலம் அதிகளவிலான மக் கள் பயன்பெறவும் பல் வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் கள். குறிப்பாக உணவு பொருள் தயாரிக்கும் போது தானியங்களை உற் பத்தி செய்வது, புதிய தானிய வகைகளை கண்டு பிடிப்பது, இருக்கின்ற பழைய இனங்களை அழி யாமல் பாதுகாப்பது உள் ளிட்ட பல்வேறு முயற்சி களை தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது.

சேலம் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறைக்கு சொந்தமான குளங்களில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்தல் 2025-26 திட்டத் தின் கீழ் சேலம், ஓமலூர், தாரமங்கலம், வீரபாண்டி மற்றும் அயோத்தியாப்பட் டணம் ஆகிய ஒன்றியங்க ளில் உள்ள நைனாத்தாள் ஏரி, சின்ன ஏரி, எம்.செட் டிபட்டி ஏரி, மூங்கில் ஏரி, மாங்குப்பை ஏரி, சின்னே ரிப்பட்டி ஏரி, அமரகுந்தி புது ஏரி, மல்லமூப்பம் பட்டி ஏரி, சேலத்தாம் பட்டி ஏரி, தளவாய்ப் பட்டி ஏரி, காட்டேரி, புத்தூர் ஏரி, கொப்பம் ஏரி, எஸ்.பாப்பாரப்பட்டி ஏரி மற்றும் தொட்டில் ஏரி ஆகிய ஏரிகளில் 4 இலட்சம் மீன் குஞ்சுகள் விடப்பட உள்ளது.

நடப்பு 2025-26ஆம் ஆண்டிற்கான வேளாண் நிதிநிலை அறிக்கையில் கிராமப்புறங்களில் உள் நாட்டு மீன் உற்பத்தியினை அதிகரிக்கும் பொருட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் கட் டுப்பாட்டிலுள்ள நீர்நிலை களில் மீன்குஞ்சுகள் இருப்பு செய்ய அறிவிப்பு வெளியிடப்பட்டது. இத னைத் தொடர்ந்து சேலம் மாவட்டத்திற்கு 200 எக் டேர் பரப்பளவில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட் சித்துறை கட்டுப்பாட்டி லுள்ள நீர்நிலைகளில் 4 இலட்சம் மீன்குஞ்சுகள் இருப்பு செய்திட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு இருப்பு செய்யப்படுகிறது.

மேற்படி இத்திட்டமா னது சேலம் மாவட்டத்தில் இன்றையதினம் ஓமலூர் வட்டாரம், முத்துநாயக்க ன்பட்டி ஊராட்சியில் அமைந்துள்ள நைனத்தாள் ஏரியில் 20,000 எண்ணம் மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்படும் பணி இன்று தொடங்கப்பட்டுள்ளது. இதே திட்டத்தின் கீழ் கடந்த 2024-25 ஆம் ஆண் டில் 100 எக்டேர் பரப்பள வில் 2 இலட்சம் மீன்குஞ்சு கள் சேலம் மாவட்டத்தில் இருப்பு செய்யப்பட்டுள் ளது. இத்திட்டத்தின் மூலம் கிராமப்புறங்களில் உள்நாட்டு மீன் உற்பத்தி யினை அதிகரிக்க செய்து அனைத்து தரப்பு மக்களுக் கும் மீன் உணவு கிடைத் திட வழிவகை செய்யப் பட்டுள்ளது.

நாட்டின மீன்குஞ்சு களை இருப்புச் செய்வதன் மூலம் உயிரினங்களின் உயிர்ச்சமநிலையை (Bal ance in) பாதுகாத்திட முடி யும். நாட்டின மீன் வகை கள் இயற்கை நீர் நிலை களில் இருக்கும் போது தாய் மீன்கள் முட்டை யிட்டு, முட்டை யிலிருந்து வெளிவரும் நுண்மீன் குஞ் சுகளை பிற வகை மீன்க ளால் உண்ணப்படுவதால் மீன்குஞ்சு களின் பிழைப் புத்திறன் பெருமளவு பாதிக்கப்படுகிறது. இத னால் அந்த மீன்இனமே அழிந்துவிடும் சூழல் ஏற்ப டுகிறது. இதனைத் தவிர்த்து நாட்டினமீன்வளத்தினைப் பாதுகாத்திட, நாட்டின மீன்களை அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களில் தூண்டுதல் முறையில் இனப்பெருக்கம் செய்து மீன்குஞ்சுகளை ஆறுகளில் இருப்பு செய்யப்படுகிறது. நாட்டின தாய் மீன்களி லிருந்து மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்யும்போது மீன்குஞ்சுகளின் பிழைப் புத்திறன் வெகுவாக அதிக ரித்திடும். இவ்வாறு சுற்று லாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரி வித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மேட் டூர் வருவாய் கோட்டாட் சியர் பொ.சுகுமார், மீன்வ ளத்துறை உதவி இயக்குநர் திருமதி த.உமா கலைச் செல்வி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர் கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணையின் படி தமிழ்நாட்டின் உரிமைகளை காக்க, மாநில சுயாட்சியை மீட்டெடுக்க தி.மு.கழகம் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்கும் வகையில் ”ஓரணியில் தமிழ்நாடு இணையதள உறுப்பினர் சேர்க்கை பயிற்சி முகாம் திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் வடக்கு மாநகரப் பொறுப்பாளர் ஈ.தங்கராஜ், தொகுதி பார்வையாளர் ராம்குட்டி (எ) ராம்மூர்த்தி, பகுதி செயலாளர் கொ.ராமதாஸ், மாநகர துணை தலைவர் ராமசாமி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் அருண் உள்பட மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், புதியதாக நியமிக்கப்பட்ட பாக சமூக வளைதள முகவர்கள் (BDA) மற்றும் பாகமுகவர்கள் (BLA2) தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சரும், கழக தலைவருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி ஈரோடு தெற்கு மாவட்டம், மொடக் குறிச்சி தொகுதியில் மொடக்குறிச்சி கிருஷ்ண மஹாலில் ஓரணியில் தமிழ்நாடு உடன்பிறப்பே வா பாகமுகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர் கள், பாக டிஜிட்டல் முகவர்கள்(DGA) கூட்டம், மொடக்குறிச்சி ஒன்றிய கழக செயலாளர்கள் சு.குணசேகரன், கதிர்வேல் , விஜயகுமார் ஆகியோர் முன்னிலையில் ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மதுவிலக்கு ஆயத் தீர்வைத் துறை அமைச்சருமான சு.முத்துசாமி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மொடக்குறிச்சி தொகுதி ஒன்றிய பாக ஒருங்கிணைப்பா ளர், பாகமுகவர்கள் (BLD2), பூத் கமிட்டி உறுப்பினர்கள், பாக தகவல் தொழில்நுட்ப அணியின் பாக டிஜிட்டல் முகவர்கள் (BLA), தொகுதி ஒன்றிய, பேரூர், வார்டு, கிளை கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் , கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.




மன்னார்குடி தொகுதியில் நகர கழக செயலாளர் வீரா.கணேசன் ஏற்பாட்டில் கலைஞர் பிறந்தநாள் செம்மொழி நாள் சிறப்பு பொதுக்கூட்டத் தில் திரைப்பட இயக்குனர் கரு.பழனியப்பன் சிறப்புரையாற்றினார். தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், சட்டத்திருத்தக்குழு உறுப்பினர் பி.ராஜமாணிக்கம், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, தாட்கோ தலைவர் நா.இளையராஜா, தலைமைச்செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன், நகர்மன்ற தலைவர் மன்னை.த.சோழராஜன், ஒன்றிய முன்னாள் பெருந்தலைவர் சோம.செந்தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட நிர்வாகிகள் கழக தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

### கோவை மாநகர் மாவட்டத்தில் “ஓரணியில் தமிழ்நாடு”

# தி.மு.கழக உறுப்பினர் சேர்க்கை முன்னெடுப்பு பிரச்சார பொதுக்கூட்டம்!

## மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிக்கை!



கோவை, ஜுலை 2 -

கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க அனைவரையும் ஓரணி யில் திரட்டுவதற்கான முயற்சியில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலை வர் முத்துவேல் கருணா நிதி ஸ்டாலின் அவர்கள் (01.07.2025) நேற்று சென் னையில் “ஓரணியில் தமிழ்நாடு” எனும் தி.மு. கழக உறுப்பினர் சேர்க்கை முன்னெடுப்பு நிகழ்வை தொடங்கி வைத்ததை அடுத்து, மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன் னாள் அமைச்சர் வி.செந் தில் பாலாஜி வழிகாட்டுத லின் படி கோவை மாநகர் மாவட்ட தி.மு.கழகத் தின் சார்பில் இன்று (02.7.2025 - புதன்கிழமை) மாலை 5.30 மணியள வில், பீளமேடு புதூர், துரை தேவராசன் திட லில், “ஓரணியில் தமிழ் நாடு” தி.மு.கழக உறுப்பி னர் சேர்க்கை முன்னெ டுப்பு பிரச்சார பொதுக் கூட்டம் நடைபெற உள் ளது. இக்கூட்டத்தில் கழக செய்தி மக்கள் தொடர்பு பிரிவு துணைத் தலைவர், ஆண்டாள் பிரி யதர்ஷினி கலந்து கொண்டு சிறப்புரை யாற்றவுள்ளார்.

அதுசமயம் இந்நிகழ் வில் கோவை நாடாளு மன்ற உறுப்பினர் கண பதி ப.ராஜ்குமார், கழக சொத்துப் பாதுகாப்பு குழு துணைத் தலைவர் பொங்கலூர் நா.பழ னிச் சாமி, கோவை மாநக ராட்சி மேயர் இரங்கநா யகி ராமச்சந்திரன், மாநகர் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலை மைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர் கள், பகுதிக் கழக பொறுப் பாளர்கள், மாநகராட்சி மண்டலத் தலைவர்கள், நிலைக் குழுத் தலைவர் கள், அனைத்து சார்பு அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், வட் டக் கழகச் செயலாளர் கள், அனைத்து மாமன்ற உறுப்பினர்கள், பகுதிக் கழக வட்டக் கழக நிர்வா கிகள், அனைத்து சார்பு அணிகளின் துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கழக செயல்வீரர்கள், கழகத் தொண்டர்கள், BLA2 பாக முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் அனைவ ரும் தவறாமல் பங்கேற்கு மாறு கேட்டுக்கொள் கிறேன்.

இவ்வாறு அவர் அறிக் கையில் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவரங்கம் க.இராசவேலு
### ஜுலை 2 (2013)



நீதிக்கட்சி குடும்பத்தைச் சேர்ந்த இவர், பள்ளிப் பருவத்திலேயே திராவிட இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, பின்னர் கழகம் துவங்கப்பட்ட போதே, கழகத்தில் இணைந்து பணியாற்றத் தொடங்கியவர்.

திருவரங்கம் பகுதியில் கழகம் வளர பாடுபட்ட மூத்த முன்னோடிகளில் இவரும் ஒருவர்.

மதி எனும் இதழை நடத்தியும், நாடகங்கள் எழுதி அதில் நடித்தும், ‘செண்பகத் தமிழ் அரங்கு’ எனும் தமிழ் அமைப்பினை தொடங்கி, அதன் மூலம் ஆயிரக்கணக்கான தமிழிலக்கியக் கூட்டங்கள் நடத்தி தமிழ் வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

திருவரங்கம் நகர்மன்ற எதிர்க்கட்சித் தலைவராக பணியாற்றி அந்நகர வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

திருவரங்கம் ரங்கநாதர் கோவில் அறங்காவலர் குழுத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

2010ல் தமிழ்ச் சான்றோர் பெருமக்களுக்கு வழங்கும் விழாவில் ‘அகவை முதிர்ந்த தமிழறிஞர்’ எனும் விருதினை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**